2

## சிறப்புக் குறிப்பு 03
## வங்கித்தொழில் துறையில் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் உறுதிப்பாட்டையும் ஊக்குவிப்பதற்காக வங்கித்தொழில் துறையை ஒருங்கிணைத்தல்

### பின்னணி

24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும் 06 உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளையும் தன்னகத்தே கொண்ட இலங்கையின் வங்கித்தொழில் துறையானது 2025 இறுதியளவில் ஏறத்தாழ ரூ. 25 றில்லியன் கொண்ட சொத்துத் தளத்துடன் நிதியியல் முறைமையில் மொத்த சொத்துக்களின் (61 சதவீதம்) பாரிய பங்கினைக் கொண்டிருந்து, நிதியியல் முறைமையில் ஆதிக்கம் செலுத்துகின்றது. அளவு, ஒன்றுடனொன்று இணைந்ததன்மை, பிரதியீட்டுத்தன்மை மற்றும் சிக்கல்வாய்ந்ததன்மை என்பவற்றின் அடிப்படையில் 05 உரிமம்பெற்ற வங்கிகள் மாத்திரம் தற்போது இலங்கையில் உள்நாட்டில் முறைமை ரீதியாக முக்கியத்துவமிக்க வங்கிகளாக பெயர்குறிக்கப்பட்டுள்ளன. அதே சந்தர்ப்பத்தில், சொத்துக்களின் அளவு மற்றும் மூலதனத் தளம் என்ற நியதிகளில் இலங்கையிலுள்ள பல உரிமம்பெற்ற வங்கிகள் ஒப்பீட்டளவில் தொடர்ந்தும் சிறியனவாகக் காணப்படுகின்றன. நிதியியல் அதிர்வுகளை ஏற்பதற்கும் பொருளாதார அழுத்தக் காலப்பகுதியில் தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கொண்டு ஈடுகொடுப்பதற்கும் இக்கட்டமைப்பு சார்ந்த மட்டுப்பாடுகள் அவற்றின் இயலளவை தடைப்படுத்துகின்றது. இதன் பின்னணியில், வலுவான ஐந்தொகைகள், பன்முகப்படுத்தப்பட்ட சொத்துப்பட்டியல்கள், ஆற்றல்வாய்ந்த ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புகள் என்பவற்றுடன்கூடிய பாரிய வங்கிகளின் பிரசன்னம் அதிகரித்தளவில் முக்கியத்துவமிக்கதாகத் தோற்றம்பெற்றுள்ளது. அத்தகைய நிறுவனங்கள் உண்மைப் பொருளாதாரத்திற்கான கசிவுத்தாக்க இடர்நேர்வுகளைத் தணிப்பதன் மூலம் வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த தாக்குப்பிடிக்கும் தன்மையினை அதிகரிக்கலாம். மேலும், சர்வதேச சந்தைகளில் இலங்கையின் வங்கித்தொழில் துறையின் வலுவான பிரசன்னத்தை இது வசதிப்படுத்துகின்ற அதேவேளை, பொதுமக்கள் நம்பிக்கையை மேலும் மீளவும் வலிமைப்படுத்தலாம்.

### நிதியியல் துறை ஒருங்கிணைத்தல் பற்றிய பிராந்திய அனுபவம்[1]

ஆசிய அனுபவத்தின் மீது கவனம்செலுத்துகையில், பிராந்தியத்திலுள்ள பல நாடுகள் அவற்றின் நிதியியல் முறைமையினை வலுப்படுத்துவதற்கும் நிலையான போக்குடைய பொருளாதார வளர்ச்சிக்குமான வழிமுறையொன்றாக வங்கித்தொழில் துறை ஒன்றுதிரட்டலை மேற்கொண்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, அதன் வங்கிகளின் வினைத்திறனை அதிகரித்தல், இலாபத்தன்மையை மேம்படுத்தல் மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை வலுப்படுத்தல் என்பவற்றை நோக்காகக் கொள்கின்ற அதேவேளை தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு பங்களிப்பதற்கு தொடரான வங்கி ஒன்றிணைப்புக்கள் ஊடாக இந்தியா ஒருங்கிணைத்தலை நாடியுள்ளது. அதற்கமைய, இந்தியாவில் அரசாங்கத்தின் தலைமையிலான ஒன்றுதிரட்டல் முயற்சிகள் அரசாங்கத் துறை வங்கிகளின் எண்ணிக்கையை 2017இல் 27 இலிருந்து 2020இல் 12ஆக குறைவடையச்செய்து, இதன்மூலம் பாரிய அரசாங்கத் துறை வங்கிகள், வலிமையான மற்றும் மிகவும் தாக்குப்பிடிக்கத்தக்க அத்துடன் மிகவும் போட்டிமிக்க நிறுவனங்களாக பரிணமிப்பதற்கு இயலச்செய்தன. நேபாளத்தின் ராஸ்டரா வங்கியும் 2011இல் ஒன்றிணைக்கும் கொள்கையொன்றினை அறிமுகப்படுத்தி நேபாளத்தில் நிதியியல் நிறுவனங்களின் எண்ணிக்கைக் குறைப்பதற்கு வழிவகுத்தது.

சிங்கப்பூர், வங்கித்தொழில் துறை தாராளமயமாக்க நிகழ்ச்சித்திட்டமொன்றுடன் ஒன்றுசேர்த்து 2000ஆம் ஆண்டின் ஆரம்ப கட்டங்களில் வங்கித்தொழில் துறை ஒருங்கிணைத்தலை நடைமுறைப்படுத்தியது. இச்செயன்முறை 6 உள்நாட்டு வங்கித்தொழில் குழுமங்களை 3 முக்கிய உள்நாட்டு வங்கித்தொழில் குழுமங்களாக (அதாவது, டிபீஎஸ் பாங்க் லிமிடெட், ஓவசீஸ் சைனீஸ் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் மற்றும் யுனைடெட் ஓவசீஸ் பாங்க் லிமிடெட்) குறைவடையச்செய்தது. தற்போது காணப்படுகின்ற மிகவும் ஒன்றுதிரட்டப்பட்ட வங்கித்தொழில் தோற்றவமைப்பிற்கு இது வழிவகுத்து இதனூடாக வங்கிகளின் இயலளவுகளை வலுப்படுத்தி, வினைத்திறன்மிக்க முகாமைத்துவ அணிகளை உருவாக்கி, ஒட்டுமொத்த தொழிற்பாட்டு வினைத்திறனையும் செயல்திறனையும் மேம்படுத்துவதற்கு இட்டுச்சென்றது.

மலேசியா அதன் நிதியியல் துறையினை சீரமைப்பதற்கு 1997இல் இதனையொத்த ஒன்றுதிரட்டுதல் நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுத்தது. 1998 அளவில் நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை 39 இலிருந்து 08 ஆகக் குறைக்கப்பட்டதுடன் இறுதியாக அனைத்து நிதிக் கம்பனிகளும் வர்த்தக வங்கிகளுடன் ஒன்றிணைக்கப்பட்டன. 2000இல், மலேசியாவில் 54 வங்கித்தொழில் நிறுவனங்களில் 50 நிறுவனங்கள் 10

1 மூலங்கள்:

- Annual Report of Central Bank of Sri Lanka, 2014 and 2015.
- Deepthi, C. A., Sindhu, K. P. & John, B. M., 2024. Public Sector Bank Mergers in India since 2020. Journal of Visual and Performing Arts, 5(1), pp. 3510-3515. Available at https://www.researchgate.net/publication/395982482_PUBLIC_SECTOR_BANK_MERGERS_IN_INDIA_SINCE_2020
- Nepal Rastra Bank, 2022. Optimal number of banks and financial institutions in Nepal. Available at https://www.nrb.org.np/contents/uploads/2022/04/Optimal-Number-of-Banks-and-Financial-Institutions-in-Nepal.pdf
- Speech by Siriwardana, C. J. P., former Assistant Governor of the Central Bank of Sri Lanka on Financial Sector Consolidation – Why and How? at the Central Bank of Sri Lanka 64th anniversary oration, September 2014. Available at https://www.bis.org/review/r141103g.pdf

2

வங்கித்தொழில் குழுமங்களாக ஒருங்கிணைக்கப்பட்டன. முன்னோக்கிச்சென்று நோக்குகையில், குறிப்பாக ஆசிய நிதியியல் நெருக்கடியின் பின்னர் தாய்லாந்து, தென் கொரியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற பல ஏனைய ஆசிய நாடுகளில் இதனையொத்த நிதியியல் துறை ஒன்றுதிரட்டல் முயற்சிகள் அவதானிக்கப்பட்டன.

2014ஆம் ஆண்டிற்கான அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் என்பன இணைந்து 2014இல் நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுத்து, இலங்கையும் நிதியியல் துறை ஒன்றுதிரட்டலில் அதற்கேயுரிய அனுபவத்தை பெற்றுக்கொண்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை முதன்மை இலக்காகக் கொண்டிருந்ததுடன் பல வெற்றிகரமான ஒன்றிணைப்பிற்கு மத்தியில், அதனைத்தொடர்ந்து நிலுவையில் இருக்கும் மேலதிக மீளாய்வில் நிறுத்தி வைக்கப்பட்டது. எனினும், 2015 காலப்பகுதியில் டிஎவ்சிசி பாங்க் பிஎல்சியினை உருவாக்குவதற்காக டிஎவ்சிசி வங்கி டிஎவ்சிசி வர்த்தன வங்கியுடன் ஒன்றிணைக்கப்பட்ட அதேவேளை எம்பிஎஸ்எல் சேர்விங்கஸ் பாங்க் லிமிடெட், இலங்கை மேர்ச்சன்ட் வங்கி பிஎல்சி மற்றும் எம்சிஎஸ்எல் பினான்ஸ் சேர்விஸஸ் லிமிடெட் என்பன இலங்கை வங்கியின் துணை நிறுவனமொன்றான மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி என்ற பெயரில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றைத் தாபிப்பதற்காக ஒன்றாக இணைக்கப்பட்டன. மேலும் 2019இல், லங்காபுத்திர டெவெலெப்மன்ட் பாங்க் லிமிடெட் பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் இணைக்கப்பட்டது.

### இலங்கையில் வங்கித்தொழில் துறையின் பரவலாக்கப்பட்ட தன்மை

இலங்கையின் தற்போதைய வங்கித்தொழில் துறைக் கட்டமைப்பானது மிகவும் பரவலாக்கப்பட்டு காணப்படுகின்றது. 6 பாரிய வங்கிகள் மொத்த வங்கித்தொழில் துறை சொத்துக்களின் ஏறத்தாழ 75 சதவீதத்தினை தன்னகத்தே கொண்டுள்ள அதேவேளை எஞ்சியிருக்கின்ற 24 வங்கிகள் 25 சதவீதம் கொண்ட சந்தைப் பங்கிற்குப் போட்டி போடுகின்றன (அட்டவணை ஆ 3.1)

அதற்கமைய, தொழிற்பாட்டு வினைத்திறனின்மை, மூலவளத் தடைகள், தகவல் தொழில்நுட்ப முறைமைகளில் குறைபாடு மற்றும் வரையறுக்கப்பட்ட சந்தைப் பங்கு என்பன காரணமாக வங்கித்தொழில் துறையின் இப்பரவலாக்கப்பட்ட தன்மை பரந்த பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கான மற்றும் நிதியியல் வாடிக்கையாளர் தேவைகளை நிறைவேற்றுவதற்கான அநேகமான உரிமம்பெற்ற வங்கிகளின் இயலுமையைத் தடைப்படுத்துகின்றது. நிதியியல் முறைமை முழுவதும் சாத்தியமானளவு பாதிக்கப்படும் தன்மைகளை ஊடுகடத்துகின்ற உள்ளக மற்றும் வெளிவாரி அதிர்வுகளுக்கு ஈடுகொடுப்பதற்கு வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த தாக்குப்பிடிக்கும் தன்மையையும் அதிகரிப்பதற்கான வலுவான ஐந்தொகை, ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு என்பவற்றுடன்கூடிய பாரிய வங்கிகளுக்கான தேவையினை இது அதிகரிக்கின்றது.

### 2025 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள்

2025 ஒத்தோபரில் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் துறை ஒருங்கிணைத்தலுக்கான கட்டமைப்பை வழங்குவதற்கு ஆளும் சபை அதன் அனுமதியை வழங்கியது. அதற்கமைய, மத்திய வங்கி 2025.12.12ஆம் திகதியிடப்பட்ட அதன் கடிதத்தினூடாக புள்ளியிடல் முறைமையின் அடிப்படையில் ஆண்டிற்கு இருமுறை நிகழும் மதிப்பீடு தொடர்பில் உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட சிறியளவிலான வங்கிகளுக்கு அறிவித்தது. அதன் பின்னர், இலங்கையின் வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பையும் ஆற்றல்வாய்ந்த தன்மையையும் உறுதிசெய்வதற்கு வங்கித்தொழில் துறை ஒருங்கிணைத்தலுக்கான பொருத்தமான உபாயங்களை நாடுமாறு உரிமம்பெற்ற வங்கிகளைப் பணித்து, மத்திய

அட்டவணை ஆ 3.1
2025.12.31 அன்று உள்ளவாறு வங்கித்தொழில் துறையின் உள்ளமைப்பு

| வகை | சொத்துக்களின் அளவு | வங்கிகளின் எண்ணிக்கை | சந்தைப் பங்கு |
|---|---|---|---|
| பாரிய வங்கிகள் | ரூ.3 றில்லியனுக்கு மேல் | 3 | 50.0% |
| | ரூ.2 றில் - ரூ.3 றில் | 1 | 9.6% |
| | ரூ.1 றில் - ரூ.2 றில் | 2 | 15.3% |
| நடுத்தர வங்கிகள் | ரூ.400 பில் - ரூ.1 றில் | 5 | 16.3% |
| சிறிய வங்கிகள் | ரூ.200 பில் - ரூ.400 பில் | 4 | 5.0% |
| | ரூ.100 பில் - ரூ.200 பில் | 2 | 1.3% |
| | ரூ.100 பில்லியனுக்கு கீழ் | 13 | 2.5% |
| | **மொத்தம்** | **30** | **100%** |

வங்கி 2026.01.23 அன்று உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வங்கித்தொழில் துறை ஒருங்கிணைத்தலுக்கான கட்டமைப்பினை வழங்கியது.

உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கட்டமைப்பின் முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- சுயமதிப்பீடு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மதிப்பீடு என்பவற்றை உள்ளடக்குகின்ற புள்ளியிடல் முறைமையொன்றின் அடிப்படையில் உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட சிறியளவிலான உரிமம்பெற்ற வங்கிகள் ஆண்டுக்கு இருமுறை மதிப்பீடு செய்யப்படும். அளவுசார் பிரமாணமாக மூலதனம், இலாபத்தன்மை, சொத்துக்களின் தரம், திரவத்தன்மை மற்றும் திரட்சி அத்துடன் பண்புசார் பிரமாணங்களாக சேவையளிக்கப்படாத வாடிக்கையாளர் வகுப்பினர்களுக்கு சேவை வழங்குதல், தொழில் மாதிரி நிலைபெறுதன்மை, முகாமைத்துவ தகவல் முறைமைகளின் போதுமையும் செயல்திறன்வாய்ந்த தன்மை போன்றன உரிமம்பெற்ற வங்கிகளினால் நடாத்தப்படுகின்ற சுய மதிப்பீட்டிற்கான அளவுசார் மற்றும் பண்புசார் பிரமாணமாக குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் இடர்நேர்வு முகாமைத்துவம், மூலவளங்களின் போதுமை அத்துடன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் பேரண்டப்பொருளாதாரச் சூழல் என்பன ஒழுங்குமுறைப்படுத்தல் மதிப்பீட்டிற்காக பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளன.
- இந்நோக்கில், மத்திய வங்கி, ஏனைய வழிமுறைகளுக்கு மத்தியில் புள்ளியிடல் முறைமைக்கமைவாக முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட அடிப்படை அளவினைவிட தொடர்ச்சியாக குறைவான புள்ளிகளை ஈட்டுகின்ற உரிமம்பெற்ற வங்கிகளுக்காக கட்டாய ஒருங்கிணைத்தலைப் பணிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும்.
- மேலும், ஒவ்வொரு வங்கியினதும் சொத்து அளவுகளுக்கேற்ப சமவிகித ஒருங்கிணைத்தல் உபாயங்களை நாடுவதற்கு கட்டமைப்பானது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்பாடு செய்வதுடன் ஏனையவற்றுக்கு மத்தியில் பணிப்பாளர் சபையினதும் பங்கு உரிமையாளர்களினதும் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல், மத்திய வங்கியின் அனுமதியை நாடுதல், மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சாத்திய கரிசனைகளுக்குத் தீர்வுகாணுதல், வைப்பாளர்களைப் பாதுகாத்தல் மற்றும் நியாயமான சந்தை நடத்தை என்பன உள்ளடங்கலாக ஒருங்கிணைத்தல் மீதான பரந்த வழிகாட்டலையும் வழங்குகின்றது.
- உரிமம்பெற்ற வங்கிகளின் தாக்குப்பிடிக்கும் தன்மையும் உறுதிப்பாட்டையும் வலுப்படுத்துவதற்கான நோக்குடன் ஆளுகை அத்துடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்களை வலிமைப்படுத்தல், தொழில்நுட்பவியல் இயலளவுளை முன்னேற்றுதல், புத்தாக்கத்தைப் பேணி வளர்த்தல் மற்றும் மூலதனத்திற்கான பெறுவழியினை மேம்படுத்தல் என்பவற்றுடன் சேர்த்து ஒன்றிணைத்தல் மற்றும் கையகப்படுத்தல் ஊடான விரிவுபடுத்தலை இயலச்செய்வதை இது நோக்காகக் கொண்டுள்ளது.

அண்மையில், உள்நாட்டு தனியார் வங்கியொன்றுக்கு இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றின் தனிநபர் வியாபாரச் சொத்துப்பட்டியலினைக் கைமாற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கி வசதியளித்தது. மேலும், 2 அரசாங்கத்திற்குச் சொந்தமான சிறிய சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின் மறுசீரமைத்தலை இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ளதுடன் இலங்கையில் வங்கித்தொழில் துறையின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை வலுப்படுத்தும் நோக்குடன் அத்தகைய முயற்சிகளை இலங்கை மத்திய வங்கி வசதிப்படுத்தும்.

### வங்கித்தொழில் துறை ஒருங்கிணைப்பின் எதிர்பார்க்கப்படும் நன்மைகள்

வங்கித்தொழில் துறை ஒருங்கிணைத்தலுக்கான கட்டமைப்பின் கீழ் ஊக்குவிக்கப்படும் உபாயங்கள் சிறியளவிலான உரிமம்பெற்ற உள்நாட்டு வங்கிகளின் குறிப்பாக, மூலதனம், தொழில்மாதிரி நிலைபெறுதன்மை மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன் என்பன தொடர்பில் சவால்களை எதிர்கொள்ளுகின்ற வங்கிகள் பாரிய மற்றும் வலிமையான வங்கிகள் மூலம் உள்ளீர்க்கப்படுவதை வசதிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், கட்டமைப்பானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாரிய வங்கிகளை ஒருங்கிணைப்பதன் வாயிலாக பாரிய வங்கிகளின் மேலும் விரிவுபடுத்தலை ஊக்குவிக்கவில்லை.

அதற்கமைய, எதிர்பாராத இழப்புகள் மற்றும் சாத்தியமான அச்சுறுத்தல்களை உள்ளீர்க்கும் இயலளவுமிக்க போதுமான தாங்கிருப்புக்கள் அத்துடன் ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவப் பொறிமுறைகளுடன் கூடிய நன்கு மூலதனமாக்கப்பட்ட வங்கிகளைத் தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதனூடாக வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த தாக்குப்பிடிக்கும் தன்மையை வலுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், வங்கித்தொழில் துறை ஒருங்கிணைத்தலானது பாரிய பொருளாதார நலன் ஊடாக உரிமம்பெற்ற வங்கிகளின் செலவுச் சிக்கனத்தை மேம்படுத்தி குறைவான வட்டி எல்லைகளுக்கு பங்களிப்பதன் மூலம் வினைத்திறன்மிக்க நிதியியல் இடைஈட்டுக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சேவை வழங்கப்படாத மற்றும் குறைவாக சேவை வழங்கப்படுகின்ற

2

2

சந்தைகளுக்கு சிறப்பாக சேவையாற்றுவதற்கு வங்கித்தொழில் துறையினை இயலச்செய்கின்ற தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும்/ டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட நிதியியல் சேவைகளில் உபாய ரீதியான முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் அதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, ஒருங்கிணைத்தலானது நிதியியல் உற்பத்திகளினதும் சேவைகளினதும் விரிவாக்கத்திற்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை, வங்கித்தொழில் துறை முழுவதும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தும்.

### ஒருங்கிணைத்தலை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியின் வகிபாகமும் முன்னோக்கிய பாதையும்

தொடர்புடைய உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் வழங்கப்படும் ஒருங்கிணைத்தல் மற்றும் வேறு தகவல்களுக்கான முன்மொழிவுகளை மத்திய வங்கி ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கின் பார்வையில் மதிப்பீடு செய்து, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) நியதிகளுக்கமைய அவசியமான அனுமதிகளை வழங்கும். மேலும், பொருத்தமானவிடத்து சில ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டலை வழங்குவதன் வாயிலாக வங்கித்தொழில் துறை ஒருங்கிணைத்தல் முயற்சிகளை மத்திய வங்கி வசதிப்படுத்தும்.

அதற்கமைய, வங்கித்தொழில் துறை ஒருங்கிணைத்தலானது நிதியியல் ரீதியாகவும் தொழிற்பாட்டு ரீதியாகவும் ஆற்றல்மிக்க வங்கிகளுக்கு வசதியளித்து இதனூடாக வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மை மற்றும் நிலைத்தன்மையை வலுப்படுத்துகின்ற அதேவேளை அனைத்தையும் உள்ளடக்குகின்ற மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும்.